நான் சொல்வதைக் கேளுங்கள். சடுகுடு விளையாட்டுக்குக்கூட விதிகள் இருக்கின்றன. இது சட்டமன்றம். இதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. காலையிலே கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். உடனேயே கிளப்பி அரசாங்கத்திடமிருந்து பதிலை எதிர்பார்த்தால் என்ன பொருள்? இது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) காலையிலே கொடுத்துவிட்டு இப்போது உடனே கேட்கிறீர்கள் என்றால் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) இது தவறான முன்மாதிரி. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) எப்படி இருந்தாலும் சரி, இப்போது எடுத்துக்கொள்வதற்கு வழியில்லை. (குறுக்கீடு) எல்லாம் சொல்லி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இது முறையல்ல. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**(ஆ) தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தல்**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் ஏற்கெனவே உயர் நீதி மன்றத்தினுடைய உத்தரவுப்படியும், அரசாங்கத்தினுடைய உத்தரவுப்படியும் தனியார் நடத்தக்கூடிய பள்ளிகளிலே 50 சதவிகித மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், அது வந்திருக்கிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்ன நிலையில் இருக்கிறது என்பதையும் சொல்கிறேன். எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்றுகூட நான் சொல்கிறேன், அறைக்கு வாருங்கள். திரு. ப. ரங்கநாதன்.

**(இ) உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோருதல்**

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய எதிர்க்கட்சி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையில் கொடுத்துவிட்டு உடனே கேட்டீர்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எடுத்துக்கொள்வதற்கு இப்போது வழியில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** 26 ஆம் தேதி நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், அப்போது எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி . . . (குறுக்கீடு)